**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.2614/ஆ5/2025, நாள்.17/06/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2025-2026ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது – தொடர்பாக

பார்வை சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (கூகூபொ) அவர்களின் கடித எண். 3447/P1/2024, நாள்.06/06/2025

•••••

2025-2026ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் ஜுன் 15 ஆம் தொடங்கி செப்டம்பர் 15ம் தேதி 2025 வரை பதிவுகள் செய்யலாம். இந்த ஆண்டு முதல் 6ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவர்கள் தங்களது புதுமையான கண்டுபிடிப்புகளை சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்கள். எனவே இந்த ஆண்டு முதல் அனைத்து பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பதிவு செய்யலாம். ஒரு பள்ளிக்கு அதிகபட்சமாக 5 மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்காக www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு செய்ய பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் (15.09.2025) முன்பே மாணவர்கள் பதிவு செய்யுமாறு அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்

1. செயல் இயக்குநர் (முகூபொ),
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,
   சென்னை – 600 025.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை மற்றும் தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)